Judicial Form No. 53

(See Rule 42 of CRP)

DEPOSITION OF WITNESS.

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR

CC NO. 550/2023

**Depostitions of PW- 5 Witness for**

| | |
|---|---|
| Name | சங்கரராமன் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of January 2024.

Signature of Witness.

09.01.2024

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை-**

நான் திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது வேலையில் இருந்து பணி ஓய்வு பெற்று விடடேன். அ.சா. 1 கீதாலட்சுமி எனது எதிர் வீட்டில் குடியிருந்து வருகிறார். 11.05.2023 அன்று இரவு 08.00 மணியளவில் நான் என் வீட்டில் TV பார்த்துக்கொண்டிருந்தபோது அ.சா.1 கீதாலட்சுமி எனக்கு போன் செய்து அவருடைய மகள் கழுத்தில் இருந்த தங்கச்செயினை யாரோ ஒரு நபர் பறித்து சென்று விட்டதாக என்னிடம் சொன்னார். அதனால் நான் உடனே கிளம்பு உதவிக்காக அந்த இடத்திற்கு

போனேன். அந்த இடம் பிள்ளையார் கோவில் முன்பு உள்ள ஆர்ச் ஆகும். அ.சா. 1 கீதா லட்சுமி என்னிடம் ஒரு ஜீன்ஸ்பேன்ட் போட்ட நபர் கையில் ஹெல்மெட்டை வைத்துக்கொண்டு அவருடைய மகள் கழுத்தில் இருந்த தங்கச்செயினை பறித்துவிட்டதாக சொன்னார். அதன் பின்னர் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு அ.சா. 1 கீதாலட்சுமியுடன் உதவிக்கு சென்றேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

அ.சா.1 கீதாலட்சுமி எனக்கு உறவினர் என்றால் இல்லை, தெரிந்தவர் ஆவார். 11.05.2023 அன்று இரவு 08.00 மணிக்கு போன் வந்தவுடன் நான் சம்பவஇடத்திற்கு போனேன் என்றால் சரிதான். சம்பவஇடம் என்பவது மடவார்குளம் ஆர்ச் உள்ள தென்புறத்தில் உள்ள கிழக்கு பார்த்துள்ள பிள்ளையார் கோவிலுக்கு முன்பென்றால் சரிதான். புகார் மனுவில் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. என்ன விவரம் நடந்ததென்று போலீசார் எழுதிக்கொடுங்கள் என்று சொன்னார்கள். நான் டிக்டேசன் சொல்லவில்லை. புகார் மனு எழுதிய பிறகு என்னிடம் சரிபார்க்க சொன்னாரா என்றால், நான் படித்து பார்த்தேன். புகார் மனுவில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால், என்ன நடந்ததென்று எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவைத்தான்(அ.சா. ஆ. 1) நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். புகார் மனு கொடுத்த நாளுக்கு பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.